Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 524/2007

Deposition of witness for: PW - 11

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலாஜி | Father/Husband Name | : ராஜசேகரன் |
| Age | : | Calling | : |
| Date | : 16.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 16day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

எதிரிகள் ஆஜர்

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றி கட்டாய பணி ஓய்வில் இருக்கிறேன். நான் ஏற்கனவே மதுரை மாவட்டம் மேலூர் வட்ட ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 21.07.2007 ம் தேதி மேலூர் காவல் நிலைய குற்ற எண் 500/2007 பிரிவுகள் 381 இதசன் வழக்கின் முதல் தகவல் அறிக்கையை நிலைய சார்பு ஆய்வாளர் திரு.பாண்டி என்பவர் முதல் புலன்விசாரணை செய்த நிலையில்.

நான் மேலூர் காவல் நிலைய குற்ற எண் 507/2007 பிரிவு 379 இதசன் கீழ் வழக்கு விசாரணையின்போது இவ்வழக்கின் எதிரிகள் சாஸ்திரி, மணிமாறன், பெரியசாமி, கண்ணன், முருகன், கல்யாணசுந்தரம் ஆகியோர்களை கடந்த 24.07.2007 ம் தேதி காலை 05.30 மணிக்கு வெள்ளரிபட்டி பேருந்து நிறுத்ததில் வைத்து காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் கண்ணன், மற்றும் பாண்டி ஆகியோர்கள் முன்னிலையில் விசாரித்தபோது எதிரி சாஸ்திரி என்பவர் எவ்வித அச்சுறுத்தலும் இன்றி தானாக வந்து கொடுத்த வாக்குமூலத்தில் எதிரி கல்யாணசுந்தரம் திருட

ஆசை வார்த்தை சொல்லி சுமார் 1,1/2 மாதத்திற்கு முன்னர் 10.06.2007 ம் தேதி ஞாயிற்று கிழமை இரவு 10.00 மணிபோல் நாங்கள் 7 பேரும் ஒன்று கூடி வெள்ளரிபட்டி பக்கம் உள்ள டிவிஎஸ் நிறுவனத்தில் திருடலாம் என்று கம்பெனிக்கு தெற்கு பக்கமாக வயக்காட்டு வழியாக வந்து தானும், மணிமாறன், பெரியசாமி, முருகன் ஆகியோர்கள் முள் வேலியை தாண்டிக்கொண்டு டிவிஎஸ் கம்பெனிக்குள் சென்றதாகவும், சுரேஷ், கார்த்திக், கண்ணன் ஆகிய மூன்று பேரும் முள் வேளி பக்கம் நின்று ஆள் வருகிறார்களா என்று பார்த்துக்கொண்டதாகவும், நாங்கள் 4 பேரும் கம்பெனியின் குடவுனுக்கு வெளியே கிடந்த அலுமினிய பீடிங் கம்பிகளை கட்டி எடுத்துக்கொண்டு வெளியில் வந்ததாகவும், அதை தனக்கு தெரிந்த ஒத்தக்கடை இரும்பு கடைவைத்துள்ள கல்யாண சுந்தம் என்பவரிடம் மறுநாள் சென்று விற்றுவிட்டதாகவும், கல்யாணசுந்தரம் இனம் தெரியாத ஆட்டோவில் வந்து திருட்டு பொருளை எடுத்து சென்றதாகவும், அவர் திருட்டு பொருளுக்கு ரூ.40,000/- கொடுத்ததாகவும், நான் பெற்ற ரூ.40,000/-ல் சுரேஷ், மணிமாறன், கண்ணன், முருகன், பெரியசாமி, கார்த்திக் ஆகியோர்கள் ஆளுக்கு ரூ.5000/- மீத பணமான ரூ.10000/- நான் எடுத்துக்கொண்டேன் என்று வாக்குமூலம் கொடுத்தார். **(சாஸ்திரி கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

அதன் பின்னர் சாஸ்திரி மற்றும் வழக்கின் மற்ற எதிரிகளான மணிமாறன், கண்ணன், பெரியசாமி, முருகன், ஆகியோர்களின் வாக்குமூலத்தின் அடிப்படையில் மற்ற எதிரியான கல்யாணசுந்தரத்தை ஒத்தக்கடை ராஜீவ் காந்தி நகரில் வைத்து 09.30 மணக்கு கைது செய்து அவர் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் 10.30 மணிக்கு எதரிகள் மூலமாக திருடிய பொருட்களை லெட்சுமிபுரம் 5 ம் தெருவில் உள்ள கோபி

பழைய பாத்திர கடை முன்பு வைத்து நீளமான உருக்கிய அலுமினிய கட்டிகள் 24, அகலமான கட்டிகள் 21, சிறிய கட்டிகள் 27, தோசை கல் வடிவமுள்ள கட்டிகள் 23 மொத்தம் 95 கட்டிகள், எடை சுமார் 500 கிலோ, உருக்காத பீடிங் அலுமினிய கம்பிகள் வளைக்கப்பட்டது, வளைக்கப்படாதது 9, ஆகியவற்றை சாட்சிகள் கண்ணன், பாண்டி முன்னிலையில் அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். அதன் பின்னர் எதிரிகளுடன் 16.00 மணிக்கு காவல் நிலையம் வந்து பாரவசம் ஒப்படைத்து, தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

பின்னர் புகார்தாரரை விசாரித்து கைப்பற்றிய பொருட்கள் அவர்களது நிறுவனத்திலிருந்து திருடிய பொருட்கள் என்று உறுதி செய்து, மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின்னர் கடந்த 24.07.2007 ம் தேதி சாட்சி குமாரசாமி என்பவரை விசாரித்து கைப்பற்றிய பொருட்கள் டிவிஎஸ் நிறுவனத்திலிருந்து திருடு போன பொருட்கள் என்று சான்றளித்து உறுதி செய்து, அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். சாட்சிகள் கண்ணன், பாண்டி, கோபி ஆகியோர்களை விசாரித்து தனி தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இதற்குமுன்னர் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் திரு.பாண்டி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 18.12.2007 ம் தேதி எதிரிகள் சுரேஷ், கார்த்தி, சாஸ்திரி, மணிமாறன், பெரியசாமி, கண்ணன், முருகன், கல்யாணசுந்தரம் பிரிவு 381 லிருந்து 380 ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். (**அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). இத்துடன் எனது புலன்விசாரணை முடித்துக்கொண்டு குற்ற எண் 500/2007, 1 முதல் 7 எதிரிகள் மீது இதச பிரிவு 380 கீழும் , 8 ம் எதிரி கல்யாணசுந்தரத்தின் மீது இதச பிரிவு

414 ன்கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாணை செய்யவில்லை, இத்துடன் குறுக்குவிசாரணை முடித்து வைக்கப்படுகிறது.**